

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2025) தலைமைச் செயலகத்தில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் தட்டச்சர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 40 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.விசாகன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திருமதி. சீமா அகர்வால், , காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) வினீத் தேவ் வான்கடே, , தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள், தாம்பரம் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், தடய அறிவியல் துறை இயக்குநர் முனைவர் சிவப்பிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.07.2025) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் 27 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 மாநிலவரி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தினை பிரித்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள நாவலூர் மற்றும் கேளம்பாக்கம் ஆகிய இரண்டு புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வணிகவரி ஆணையர் எஸ்.நாகராஜன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, 2025–26 ஆம் கல்வி ஆண்டில் புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களான இந்திய தொழில்நுட்ப கழகம், ஒன்றிய பல்கலைக்கழகங்கள், தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய சட்டப் பல்கலைக்கழகம், Miranda House, University of Delhi போன்றவற்றில் சேர்க்கை பெற்ற 136 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல ஆணையர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ். அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்ட “தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கை–2025–யினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை கூடுதல் செயலாளர் திருமதி ச. வளர்மதி, சமூக நல இயக்குநர் திருமதி. மா.செள.சங்கீதா, மாநில திட்டக்குழு உறுப்பினர் முனைவர் நர்த்தகி நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (31.7.2025) தலைமைச் செயலகத்தில், தென்னிந்திய பகுதிகளின் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கே.எஸ். பிரார் சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 7 தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் 1 சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகியோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தர மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மேலாண்மை இயக்குநர் மரு.மா.ஆர்த்தி, பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், உறுப்பினர் செயலர் முனைவர். சி. உஷாராணி ஆகியோர் உடனிருந்தனர்.

### தலைமைச் செயலகம்

# சட்டத் துறை நூலகத்தில் ரூ.24.78 லட்சத்தில் மின் நூலகம்!

## அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைத்தார்!

சென்னை, ஆக. 1 -

2025-2026-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (31.07.2025) தலைமைச் செயலகத்திலுள்ள சட்டத் துறை நூலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.24.78 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட மின்நூலகத்தை துவக்கி வைத்தார்.

இதன் மூலம் சட்டத் துறையில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கு தேவையான அனைத்து தகவல்களை கண்டறியவும், மற்றும் அவர்களின் இருப்பிடத்தில் இருந்து கொண்டு அவர்களுக்கு தேவையான குறிப்பு ஆதாரங்களை தேடுவதற்கு உதவுகிறது. முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, அரசு சட்டக் கல்லூரிகளில் காலியாக உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறே, அரசு சட்டக் கல்லூரிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 கல்லூரி



நூலகர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கி உரையாற்றினார்.

அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:-

நூலகம் என்பது மிக முக்கியமான ஒன்று. அரசு அலுவலகங்களிலும், வீடுகளிலும் தினந்தினம் புத்தகங்களை படிக்கும் போதுதான் அறிவு விசாலமாகிறது. கல்லூரிகளிலும், அரசு அலுவலகங்களிலும் ஆராய்ந்து பார்க்க நூலகங்கள் தேவைப்படுகிறது. நான் 1971 முதல் தற்போது வரை சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறேன். சட்டமன்ற பேரவை நூலகத்தில் அமர்ந்து படிக்கும் போது பல புத்தகங்களை வாங்க சட்டமன்ற பேரவைச் செயலாளரிடம் பரிந்துரை செய்திருக்கிறேன். கல்லூரி மாணவர்கள் நூலகங்களை பயன்படுத்தியே ஆக வேண்டும். ஆகவே, நூலகத்தை பயன்படுத்தாவிட்டால் அவர் முழுமையான பார்வையை பெற்றவர் அல்ல. சட்டத்துறை எனக்கு தாய் வீடு போன்றது. இங்கு ஒரு நூலகம் இருப்பது அனைவருக்கும் தெரியும் வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், நூலகர் பணியாளர்கள் கேட்கும் புத்தகங்களை எங்கிருந்தாலும் உடனடியாக எடுத்து தர வேண்டும். மேலும், அரசு சட்டக் கல்லூரியில் பணி நியமன ஆணை பெற்ற 8 நூலகர்களும் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்று வாழ்த்தி பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சட்டத் துறை செயலாளர் சி.ஜார்ஜ் அலெக்சாண்டர், சட்டக் கல்வி இயக்குநர் முனைவர். ஜெ.விஜயலட்சுமி மற்றும் துறையின் அனைத்து உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

### பொருநை அருங்காட்சியகத்தின்

# அனைத்து கட்டடப் பணிகளையும் விரைந்து முடித்திடுக!

## ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் எ.வ.வேலு அறிவுறுத்தல்!

சென்னை, ஆக.1-

சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று (31.07.2025), பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், திருநெல்வேலி மாவட்டம், பொருநை அருங்காட்சியகப் பணிகள் குறித்து பொதுப்பணித் துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ், முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்கள். “வீரம் விளைந்த திருநெல்வேலி நகரத்தை ஒட்டி பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும்“ என்று அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களால், 18.5.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அதில், ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் தொல்லியல் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் மூலமாக கிடைத்தப் அரி



யப் பொருட்களை காட்சிப்படுத்த அருங்காட்சியகம் கட்டப்படும் என்று அறிவித்தார்.

கொற்கையில் 812 பொருட்கள், ஆதிச்சநல்லூரில் 1,620 பொருட்கள், சிவகளையில் 185 பொருட்கள் என 2,617 பொருட்கள் 106 முதுமக்கள் தாழிகள் அகழாய்வு மூலமாக கண்டறியப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு ரூ.33 கோடி மதிப்பீட்டில், 13 ஏக்கர் பரப்பளவில், 54,000 சதுர அடி கொண்ட 7 பகுதியாக கட்டப்பட்டுள்ளது.

பொருநையில் கட்டப்பட்டு வரும் இந்த அருங்காட்சியகத்தில், சிவகளைப் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த ஓர் கட்டடமும், ஆதிச்சநல்லூர் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த 2 கட்டடமும், கொற்கைப் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த 2 கட்டடமும் மற்றும் சுகாதார வசதிகள் கொண்ட கட்டடங்களும் கட்டப்பட்டது.

பொதுப்பணித்துறை அலுவலர்களிடம் மீதமுள்ள அனைத்து பணிகளையும் விரைவாக முடித்து, பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, முதன்மை தலைமைப் பொறி யாளர் ச.மணிவண்ணன், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிகண்டன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.